செய்தி வெளியீடு எண்: 615 நாள்: 23.04.2024

## செய்தி வெளியீடு

2024 ஆம் ஆண்டு மக்களவைப் பொதுத்தேர்தல் 19.04.2024 அன்று தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்துள்ளது. இரண்டாம் கட்டமாக அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் மக்களவை தேர்தலும் ஆந்திரப் பிரதேச மாநில மக்களவை மற்றும் சட்டமன்ற தேர்தல்கள் கீழ் காணும் நாட்களில் நடைபெறவுள்ளது.

| மாநிலம் | தேர்தல் நாள் |
|---|---|
| கேரளா | 26/04/2024 |
| ஆந்திரபிரதேசம் | 13/05/2024 |
| கர்நாடகா | 26/04/2024 (முதற்கட்டம்) & 07/05/2024 (இரண்டாம் கட்டம்) |

தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாக்குரிமை உள்ள தினக்கூலி/தற்காலிக/ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் அவர்கள்தம் சொந்த மாநிலத்திற்கு சென்று வாக்களிக்க ஏதுவாக மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, 135(B)–ன் கீழ் அந்தந்த தேர்தல் நாட்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தேர்தல் நாட்களில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் தொடர்பாக தமிழ்நாட்டில் தங்கி பணிபுரியும் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஓட்டுரிமை உள்ள தொழிலாளர்கள் புகார் அளிக்க ஏதுவாக தொழிலாளர் துறை சார்பில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் சென்னை மாவட்டக் கட்டுப்பாட்டு அறை விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**மாநில கட்டுப்பாட்டு அறை**

| **மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறை அலுவலர் பெயர் மற்றும் பதவி** | **கைபேசி எண்** | **தொலைபேசி எண்** |
|---|---|---|
| திரு. தே. விமலநாதன், தொழிலாளர் இணை ஆணையர்-1, மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளர், | 9445398801 | 044-24335107 |
| திரு. M. வெங்கடாச்சலபதி, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), முதல் வட்டம், சென்னை. | 7010275131 | 044-24330354 |
| திரு. சுபாஷ்சந்திரன், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), இரண்டாம் வட்டம், சென்னை. | 8220613777 | 044-24322749 |
| திரு. சிவக்குமார், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), மூன்றாம் வட்டம், சென்னை. | 9043555123 | 044-24322750 |

**மாவட்ட கட்டுப்பாட்டு அறை (சென்னை மாவட்டம்)**

| **வரிசை எண்** | **மாவட்ட கட்டுப்பாட்டு அறை அலுவலர் பெயர் மற்றும் பதவி** | **கைபேசி எண்** | **தொலைபேசி எண்** |
|---|---|---|---|
| 1 | திருமதி.C.விஜயலட்சுமி, தொழிலாளர் துணை ஆய்வாளர், 1வது வட்டம், சென்னை | 9840829835 | 044-24330354 |
| 2 | திரு.E.ஏகாம்பரம், தொழிலாளர் துணை ஆய்வாளர், 6வது வட்டம், சென்னை | 9790930846 | 044-24330354 |
| 3 | திருமதி. R. வேதநாயகி, தொழிலாளர் துணை ஆய்வாளர், 9வது வட்டம், சென்னை | 9884264814 | 044-24330354 |

மேற்கண்ட தகவல்களை ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மற்றும் தொழிலாளர் ஆணையர் (பொறுப்பு) திருமதி எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in